DEPOSITION OF WITNESS

(Chapter XXXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, PANRUTI.

CC. No.11/2018

Police Station : - Kadampuliyur P.S

Additional Witness - PW.6

| Name | வேல்முருகன், சிறப்பு உதவி ஆய்வாளர் | Taluk | |
|---|---|---|---|
| Father's Name | | Village | |
| Age | | Calling | |

உறுதிமொழிச்சட்டம் 1969 பிரிவு-3ன் படி 27.04.2026 அன்று குற்றவியல் நடுவர் நீதித்துறை நடுவர் எண்.2, திரு.லூ.மார்ஷல் ஏசுவடியான் B.A, L.L.B(Hons) அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

(A1 to A3 present)

**முதல் விசாரணை**

நான் தற்போது காடாம்புலியூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிகிறேன். இவ்வழக்கில் புகார் மனு பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த தலைமை காவலர்-2173 கங்காதரன் மற்றும் புலன் விசாரணை மேற்கொண்டு இறுதி அறிக்கை தாக்கல் செய்த உதவி ஆய்வாளர் சுதாகர் அவர்களின் கையொப்பம் மற்றும் கையெழுத்து எனக்கு நன்கு பரிச்சியம் என்பதாலும் இவ்வழக்கின் ஆவணங்களின் அடிப்படையிலும் சாட்சியம் அளிக்கிறேன்.

2. கடந்த 29.11.2017 அன்று காலை சுமார் 06.00 மணியளவில் மேற்சொன்ன தலைமை காவலர்-2173 கங்காதரன் நிலைய பொறுப்பில் இருந்தபோது தனஞ்செயன் மனைவி வனிதா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று நிலைய குற்ற எண்.565/2017, இ.த.ச.பிரிவுகள் 294(b), 323, 506(2) r/w 4 of TNPHW Act கீழ் முதல் அறிக்கை பதிவு செய்து அசல் புகார் மனுவையும், முதல் தகவல் அறிக்கையும் சமூகம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்து வழக்கு கோப்பினை புலன் விசாரணைக்காக உதவி ஆய்வாளர் சுதாகர் பார்வைக்கு வைத்துள்ளார். **புகார் மனு அ.சா.ஆ.2 ஆகவும் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3. பின்னிட்டு உதவி ஆய்வாளர் சுதாகர் வழக்கு கோப்பினை பார்வையிட்டு தனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு கடந்த 29.11.2017 அன்று காலை சுமார் 07.00 மணியளவில் சாட்சிகள் ராஜவர்மன், மண்ணாதன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ

இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்று அவர்களை விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைவடம் முறையே அ.சா.ஆ.4 மற்றும் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

4. மேலும், வழக்கின் புகார்தாரரும் காயம்ப்பட்ட நபருமான வனிதா என்பவரையும், மேலும் பாதிக்கப்பட்ட நபரான தனஞ்செயன் என்பவரையும், கண்ணுற்ற சாட்சிகளான புஷ்காந்தி, தனம் ஆகியோர்களையும் கடந்த 29.11.2017 அன்று விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். மேற்படி சாட்சிகளின் விசாரணையிருந்து சம்பவம் உண்மை என தெரியவந்ததில் வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரிகளான ரமேஷ், மகேஸ்வரி, உமா ஆகியோர்களை தேடியதில் எதிரி கடந்த 29.11.2017 அன்று அங்குசெட்டிபாளையம் பேருந்து நிறுத்தத்தில் நின்று இருந்தவரை சுமார் 13.00 மணியளவில் காரணம் கூறி கைதுசெய்து 13.30 மணிக்கு நிலையம் கொண்டு வந்து திரேக சோதனை செய்து பாராவசம் ஒப்படைத்து தக்க வழிகாவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். மற்ற எதிரிகளான மகேஸ்வரி மற்றும் உமா ஆகியோர்கள் மேன்மைமிகு கடலூர் மாவட்ட முதன்மை அமர்வு நீதிமனறத்தில் CMP.5284/2017 மனுவில் கடந்த 05.12.2017 அன்று முன்ஜாமீன் பெற்றுயிருந்ததால் உதவி ஆய்வாளர் அவர்களை கைது செய்ய வில்லை.

5. வழக்கில் காயம்பட்ட வனிதா என்பவருக்கு சிகிச்சை அளித்த பண்ருட்டி அரசு மருத்துவமனை மருத்துவர் அரவிந்தன் என்பவரை கடந்த 06.12.2017 அன்று விசாரணை செய்து மேற்படி நபருக்கு ஏற்பட்ட காயம் சொற்பகாயம் என்று வழங்கிய காயச்சான்றை பெற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **மேற்படி விபத்துபதிவேட்டின் கூடிய காயச்சான்று அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேலும் மேற்சொன்ன தலைமை காவலரை உதவி ஆய்வாளர் விசாரணை செய்துள்ளார்.

6. மேற்படி உதவி ஆய்வாளர் இத்துடன் வழக்கின் புலன் விசாரணை முடித்து 1 வது எதிரி மீது இ.த.ச.பிரிவுகள் 294(b), 323, 506(2) r/w 4 of TNPHW Act கீழும், 2, 3 வது எதிரிகள் மீது இ.த.ச.பிரிவுகள் 294(b), 323 கீழும் கடந்த 09.12.2017 அன்று இறுதி அறிக்கை தயார் செய்து சமூகம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்துள்ளார். உதவி ஆய்வாளர் விசாரணையில் அ.சா.1 முதல் அ.சா.5 ஆகியோர்கள் அவர்களின் கு.வி.மு.சா.161(3) வாக்குமூலத்தில் சொல்லியுள்ளதுபோல் சொல்லியுள்ளார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை-**

ஆவணங்கள் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். வாதிகொடுத்த பொய்யான புகார் மனுவை பெற்றுக்கொண்டு உங்கள் கீழ்நிலை அதிகாரி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார் என்றால் சரியல்ல. மேல்நிலை அதிகாரி முறையாக புலன் விசாரணை செய்யாமல் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளர் என்றால் சரியல்ல இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி சம்பவம் இடம் செல்லாமல் சாட்சிகளை முறையாக விசாரணை செய்யாமலும் ஆவணங்கள் அனைத்தையும் காவல் நிலையத்தில் வைத்து ஏற்கனவே தயார் செய்து இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் அதற்கு அனுசரனையாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்சொன்ன எதிரி ரமேஷ் என்பவரை சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் உதவி ஆய்வாளர் கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. மேல் நிலை அதிகாரி தாக்கல் செய்த இறுதி அறிக்கைக்கு சாதகமாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கு வழக்கின் எதிரிகளுக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.